**செய்தி வெளியீடு எண்.898** **நாள்.22.10.2008**

செய்தி வெளியீடு

கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்பட்டினத்தில் மத்திய அரசு பங்களிப்பு திட்டத்தின் கீழ் ரூ. 40.00 கோடி செலவில் மீன்பிடித்துறைமுகம் அமைப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம், கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களின் நீண்ட கால கோரிக்கையினை நிறைவேற்றுவதாக உள்ளது. மீன்பிடித்துறைமுகம் அமைய உள்ள இடமான தேங்காய்பட்டினம் நாகர்கோயிலில் இருந்து சுமார் 37 கி.மீ தூரத்தில் கன்னியாகுமாரி மாவட்டத்தின் மேற்குகரையில் உள்ளது. இந்த இடமானது தாமிரபரணி ஆற்றின் முகத்துவாரத்தில் அமைந்துள்ளது. இம்மீன்பிடித்துறைமுக- மானது இரண்டு படகுகள் நிறுத்தும் தளங்கள், ஏலக்கூடங்கள், வலை பின்னும் கூடங்கள், படகு எஞ்சின்களை பழுது பார்க்கும் கூடங்கள் மற்றும் இதர வசதிகளுடன் கூடிய ஏற்றுமதி வர்த்தகத்திற்கு தேவையான இடர்கள் பற்றிய ஆய்வு மற்றும் தரக் கட்டுப்பாடு மதிப்பீட்டளவு (Hazard Analysis Critical Central Point (HACCP) ஆகியவற்றுடன் மாதிரித்துறைமுகமாக கட்டப்பட உள்ளது. இத்துறைமுகம் அமைக்கப்படுவதால் மீன்பிடி படகுகளில் சுமார் 10,000 பேருக்கும் மற்றும் கரையோரங்களில் 1,000 பேருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கப்பெறும். மேலும், இத்துறைமுகத்தால் ஆண்டுதோறும் ரூ. 50.00 கோடி அன்னியசெலவாணி கிடைக்கப்பெறும் .

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.